[1972 மார்ச் 3

திரு. சோ. அழகர்சாமி : அந்தத் திட்டத்தை எந்த முறையில் கொண்டு வருவது என்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது? இப்போது பெரும்பகுதி நிலங்கள் வீட்டு மனையாக வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த மனைகளை ஈடாக வைத்துக் கொண்டு நகரங்களில் கடன் கொடுப்பது போன்று கிராமப் புறங்களிலும் எல்.ஐ.சி. கடனைப் பெற்றோ அல்லது பாங்குகளின் மூலமாகவோ கூட்டுறவு முறையில் பணம் கொடுக்க அரசு சீக்கிரத்தில் முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எல்.ஐ.சி. கடன் உதவி பெற்று ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அதன் மூலம் அவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதுதான் இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்பட்டு அமலுக்கு வரும்.

மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலை

*283 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரம் மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையில் 1970-க்குப் பின்னால் எத்தனை பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாயூரம் தாலுக்கா மணல் மேட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலையில் 31—12—1970க்குப் பின்னால் 11 தொழிலாளிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். பின்னர் இதில் 10 பேர்கள் மறுபடியும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு விட்டார்கள்.

Vanaspathi factory

*284 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a vanaspathi factory in the State; and

(*b*) if so, the details of the same?

1972 மார்ச் 3]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணுமலையில் கூட்டுறவுத் துறையில் வனஸ்பதி தொழிற்சாலை ஒன்றை நிறுவ ஒப்புக் கொண்டு, ஆலை நிறுவும் இடத்தையும் தேர்ந்தெடுத்து அதை வாங்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடனும் சில தனி நபர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. மேற்சொன்ன கழகமானது இந்த ஆலைக்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : வட ஆற்காடு மாவட்டத்தில் இதற்கு முன்பே ஒரு வனஸ்பதி தொழிற்சாலை இருந்து அது இப்போது நடைபெருமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மணிலா உற்பத்தி செய்வதால் இந்தத் திட்டம் ஒரு பெரிய அடிப்படையில் அமைய வேண்டும். ஆகவே, அத் திட்டத்தின் விவரங்களையும், அதன் மூலதன விவரங்களையும் அரசு அறிவிக்குமா .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவர அறிக்கை தயாரிக்கப் பட்டு வருகிறது. அதைத் தயாரித்தவுடன் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கலாம்.

திரு. என். கே. பழனிசாமி : அதன் மூலதனச் செலவு எவ்வளவு என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் சொன்னேன். அவர்கள் திட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிருர்கள். ஸ்டேட் மார்க்கெட்டிங் பெடரேஷனை அவர்கள் தீர்மானித்த பிறகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் அதைப் பற்றி கேள்வி கேட்கலாம்.

அணைக்கட்டுத் திட்டங்கள்

* 285 வினு.—**திரு. பி. எஸ். மணியம் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாடு அரசால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ள அணைக்கட்டுத் திட்டங்கள் தற்போது எத்தனை ?